# வாழ்த்துரை

*[வா. ஸ்ரீவத்ஸாங்காசாரியர், பிரின்ஸிபால், சென்னை ஸம்ஸ்க்ருதக்கல்லூரி, மயிலை, சென்னை-60004.]*

*ஸ்ரீ தியாகப்ரம்மத்தையறியாதார் யாருமில்லை. ஸ்ரீராமபக்தியே உருவெடுத்து ஸ்ரீஆஞ்சேனயரைப் போன்று ஸ்ரீராமநாமங்களை பஜனை செய்து வந்த பெரிய மஹான். ஸங்கீத சாஸ்த்ரத்தை பாவ-ராக-தாளத்துடன் உலகில் பரவச்செய்த அந்த மஹான் ஒரு மறுமலர்ச்சியை, எழுச்சியை மக்களிடம் தூண்டி ஒருவகையில் நம் பாரதப் பண்பாட்டினை உலகறியச்செய்த பெரும் வள்ளல். அவரது இனிய கானத்துக்கு உருகாதவர் யாருமில்லை.*

*இத்தகைய மஹானிடம் த்ருடமான பக்தி பூண்டுள்ள ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன் அவர்கள் மிகவும் சிறந்த தொண்டு பூண்டுள்ளார்கள். இவர்கள் இளமையிலிருந்தே ஸ்ரீத்யாகப்ரம்மத்தைப் பற்றியே மனதில் ஸதா எண்ணி ஆசார்யனாக அவரையே வரித்து "தேவு மற்றறியேன் குருகூர் நம்பி பாவின் இன்னிசை பாடித்திரிவனே" என்று ஸ்ரீநம்மாழ்வாரின் புகழை இனிய கானத்துடன் பாடி உலகில் முதலில் வெளியிட்ட ஸ்ரீமதுரகவி ஆழ்வாரைப் போன்று வாழ்ந்து வருபவர். இவர் ஸ்ரீத்யாகப்ரம்மத்தின் கானாம்ருத ஸாகரத்தில் மூழ்கி இவரது பக்தியின் வெளியீட்டாக ஸஹஸ்ரநாமம், பஞ்சசதீ, த்ரிசதீ, அஷ்டோத்தரசதம் என்பன போன்று பல நாமாவளிகளைப் படைத்துப் பாடியுள்ளார். இது வெறும் அஷ்டோத்தரம் போன்றதன்று. தமது ஆழ்ந்த அனுபவத்தை வெளியிடும் அநுபவ பரீவாஹம். இதில் ஸ்ரீத்யாகப்ரம்மத்தைக் காணலாம். அவரது ஸ்ரீராமனைக் காணலாம். அவர் அனுபவித்து வெளியிட்டபடி ஸ்ரீராமபிரானின் திருமேனியை ஸேவிக்கலாம். அவரது கானத்தில் அமைந்துள்ள கருத்தாழத்தை உணரலாம். நம் கண்முன்னே இவை அனைத்தையும் கொணர்ந்து நிறுத்துகிறது இந்த நூல்கள். அவ்வளவும் அநுபவத்தில் தோன்றியவை. வடமொழியில் நல்ல புலமையும் தேர்ச்சியும் ஸ்பஷ்டமான உச்சாரணமும் ஸங்கீதமும் நிறைந்துள்ளபடியால் சொல்லோவியம் கருத்தாழத்துடன் ஒளிர்வது கண்கூடு. சில இடங்களில் புதிய சொற்களைக் கையாண்டிருப்பது - ஸ்ரீத்யாகப்ரம்மத்தின் பாட்டுக்களின் ஊறிய ஊற்றத்தால் ஏற்பட்டது.*

*மேலும் இவர் ஸ்ரீத்யாகப்ரம்மத்தைப் பற்றி அத்புதமான சரணாகதி கத்யமும் மங்கலாஷ்டகமும் எழுதியுள்ளார். வடமொழி இலக்கியத்தில் கத்யகாவ்யங்கள் மிகவும் குறைவு. "கத்யம் கவீநாம் நிகஷம் வதந்தி" [கத்யகாவ்யம் கவிகளை உறைபோட உறைகல் என்பதாய் ஆன்றோர் பகர்வர்] என்று ஒரு பழமொழி உண்டு. சந்தஸ் (சுலோகங்கள்) ஆகில்*

"சுலோகத்தில் விருத்தம் சேர்வதற்காக இந்த சொல்லைப் பயன்படுத்தினேன், இப்படி பிரித்துப் பொருள் கூறவேண்டும்" என்பது போல் ஏதேனும் காரணம் கூறி தப்பிக்கலாம். "ஸ்வாயந்தே சப்த ப்ரயோகே கிமிதி அவாசகம் ப்ரயுஜ்யதே" ' [சொற்றொடர்களை தன்விருப்பப்படி அமைக்க வழியுள்ளபோது வருந்தி பதங்களை எழுதுவது கூடாதன்றோ?] என்றபடி கத்ய காவ்யங்களில் சில நியமங்களை மீறுத நிலை உண்டு. இவை யாவும் இங்கு நன்கு அமைந்துள்ளது. இந்நோக்கில் இந்த கத்யம் தலைசிறந்து விளங்குகிறது. இது இவரது சிறந்த புலமைக்கு ஒரு சான்று. பக்தியின் பெருக்கால் இது வெளியிடப்பட்டது. அதுபோல் மங்களாஷ்டகமும் அழகாக அமைந்துள்ளது. இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஸகல ச்ரேயஸ்ஸுக்களும் அமையும் என்பது உறுதி.

இந்த மிகச் சிறந்த கவயித்ரீ சில காலம் சேலம் சாரதா கல்லூரியில் கணிதப் பேராசிரியையாக இருந்தார். கிளியைப் பழக்குவிக்குமாப்போலே தமது இரு பெண் கிளிகளுக்கு பாவனையையும் பதிவிசையும் போல் உணவோடு இரண்டற ஸங்கீதத்தையும் குழைத்து ஊட்டி வருபவர். குடும்பப் பணிகளைச் செவ்வனே செய்து மகிழ்வார். இத்தகைய இம் மாணிக்கத்தை ஸ்ரீத்யாகப்ரம்ம பக்தியே உருவான பெண்மணியைப் பெற்ற படைத்த - வரப்பெற்ற குடும்பங்கள் சிறப்பெய்தின. இவரது துணைவரும் பெருந்தகையாளர்.

இந்த நூல்களை நான் அடிமுதல் கடை வரை படித்து மகிழ்ந்தேன். ஆங்காங்கு நேரிலேயே ஸ்ரீத்யாகப்ரம்மத்தை ஸேவித்த உணர்வை அடைந்தேன். பூரண மனநிறைவு எய்தினேன். இந்நூல்களை வெளியிட்டு பெரும்புகழையோ பதவியையோ அடைய இவருக்கு எண்ணமில்லை. ஸ்வாநுபவத்துக்காகவே இதை எழுதினார். ஆயினும் "பாத்ரஸ்த்தம் ஆத்மஜ்ஞானம்ச சாந்த்வா தர்மம் ஸமாசரேத் ந அந்தர்தாய ஸ்வயம் யாதி ஜகத் பீஜம் அபீஜகம்" [தன்னிடமுள்ள சிறந்த ஜ்ஞானத்தைத் தகுந்த பாத்திரங்களுக்குக் கொடுப்பதாகிய தர்மத்தைச் செய்யவேண்டும். தன்னோடு இக்கலைமறைய விடலாகாது. உலகில் விதை அற்றுப் போகக்கூடாதே] என்ற பகவந் நியமனத்தை அடியொற்றி இதை அச்சேற்றி வெளியிட ஸம்மதித்தார். ஆகவே பால்யம் தொட்டு கங்கையில் புனித நீராடுவதையும், த்ரிவேணியில் ஸ்நாநமும் விரும்பும் இவருக்கு ஸ்ரீத்யாகப்ரம்மத்தின் ஸங்கீத கங்காஸ்னானமும், பாவ-ராக-தாளமாகிய த்ரிவேணி ஸ்நாநமும் தினமும் கிடைத்து வருவது பகவத் ஸங்கல்பமே. இவரது சிறந்த இத்தகைய தொண்டுகள் சிறக்க பகவானை ப்ரார்த்திக்கிறேன். இத்தகைய நற்செயல்களை வெகுவாக அடிக்கடி செய்துக்கொண்டு பல்லாண்டு பல்லாண்டாய் இவர் ஸகுடும்பம் க்ஷேமமாய் இருந்து வாழ அந்த த்யாகப்ரம்மத்தையே ப்ரார்த்திக்கிறேன்.